**நவம்பர் – 12**

# TNPSC துளிகள்

- கிரண் தேசாயின் "The Loneliness of Sonia and Sunny" என்ற புத்தகம் ஆனது புக்கர் பரிசுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- கூகுள் நிறுவனமானது, விண்வெளியில் செயற்கை நுண்ணறிவில் இயங்கும் தரவு மையங்களை உருவாக்குவதற்காக சன்கேட்சர் திட்டம் என்ற ஓர் இலட்சிய மிக்க ஆராய்ச்சி முன்னெடுப்பினை அறிவித்துள்ளது.
    - இது புவியின் ஆற்றல் மற்றும் நீர் நுகர்வைக் குறைக்க விண்வெளியில் AI தரவு மையங்களை வழங்குகின்ற சூரிய சக்தியில் இயங்கும் செயற்கைக்கோள்கள் ஆகும்.
- நிலையான மற்றும் வாழக்கூடிய நகரங்களுக்கான நகர்ப்புற மற்றும் பிராந்தியத் திட்டமிடலின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் வகையில், நவம்பர் 08 ஆம் தேதி அன்று உலக நகரத் திட்டமிடல் தினம் என்றும் அழைக்கப்படுகின்ற உலக நகரமய மாக்கல் தினம் அனுசரிக்கப்பட்டது.
    - 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "With Planning We Can" என்பதாகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்


## 18வது UMI மாநாடு 2024




- மூன்று நாட்கள் நடைபெறும் நகர்ப்புறப் போக்குவரத்து / இயக்கம் இந்திய (UMI) மாநாடு மற்றும் கண்காட்சி 2025 ஆனது, ஹரியானாவின் குருகிராமில் நடைபெற்றது.
- சென்னை மாநகரானது, பின்வரும் பிரிவுகளில் விருதுகளை வென்றது.
    - அதன் சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகச் செயல்பாட்டிற்காக (MTC) சிறந்தப் பொதுப் போக்குவரத்து அமைப்பு கொண்ட நகரம்.
    - சிறந்த பல்முனைய ஒருங்கிணைப்புடன் கூடிய மெட்ரோ இரயில் ஒருங்கிணைப்பு.

❖ 'சிறந்த பயணிகள் சேவைகள் மற்றும் திருப்தியுடன் கூடிய மெட்ரோ இரயில்' சேவை என்பதற்காகவும் சென்னை பாராட்டு பெற்றது.

## கொடைக்கானல் மலைகளில் பயிர்த் தாளடி எரிப்பு




❖ தமிழ்நாட்டின் கொடைக்கானல் மற்றும் பழனி மலைகளில் பயிர்த் தாளடிகளை எரிக்கும் நிகழ்வு அதிகரித்து வரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

❖ விவசாயிகள் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் அறுவடைக்குப் பிறகு பயிர்த் தாளடிகளை எரித்து அடுத்த விதைப்புப் பருவத்திற்கு வேண்டி அந்நிலத்தைத் தயார் படுத்துகிறார்கள்.

❖ நில அடுக்கு முறை விவசாயம் மற்றும் மனிதவளப் பற்றாக்குறை மலைப்பாங்கான நிலப்பரப்பில் கைமுறையாகவோ அல்லது இயந்திர ரீதியாகவோ கழிவுகளை அகற்றுவதை கடினமாக்குகிறது.

❖ சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், இந்த எரிப்பு மண்புழுக்கள் மற்றும் நுண்ணுயிரிகளைக் கொன்று தீங்கு விளைவிக்கும் வாயுக்களை வெளியிடுவதன் மூலம் மண் வளத்தைப் பாதிக்கிறது என்று எச்சரிக்கின்றனர்.

❖ பயிர்த் தாளடி எரிப்பிலிருந்து பறக்கும் தீப்பொறிகள் காட்டுத் தீயை பற்ற வைத்து மலைகளின் சுற்றுச்சூழல் தாங்கு மண்டலங்களை சேதப்படுத்தும் என்று அதிகாரிகள் எச்சரிக்கின்றனர்.

## சென்னை மெட்ரோ இரயில் மூலமான முதல் உறுப்பு இடமாற்ற பணி

❖ தமிழ்நாட்டில் முதல் முறையாக, சென்னை மெட்ரோ இரயில் (CMRL) நிர்வாகமானது தானமாக வழங்கப்பட்ட ஓரிணை நுரையீரல்களைக் கொண்டு செல்வதற்கான ஒரு பசுமை வழித்தடமாக செயல்பட்டது.

❖ 2025 ஆம் ஆண்டு நவம்பர் 08 ஆம் தேதியன்று, மீனம்பாக்கம் மெட்ரோவிலிருந்து AG-DMS மெட்ரோவிற்கு, 21 நிமிடங்களில் 10.82 கிலோமீட்டர் தூரத்தை கடந்து உறுப்புகள் கொண்டு செல்லப்பட்டன.

❖ இது CMRL அதிகாரிகளால் சுமூகமாக ஒருங்கிணைக்கப்பட்ட தமிழ்நாட்டின் முதல் மெட்ரோ வழியான உறுப்பு இடமாற்றத்தினைக் குறிக்கிறது.




# தேசியச் செய்திகள்

## பாரத் சர்வதேச அரிசி மாநாடு (BIRC) 2025




❖ பாரத் சர்வதேச அரிசி மாநாடு (BIRC) 2025 ஆனது புது டெல்லியில் நடைபெற உள்ளது.

❖ இது இந்திய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் வணிகத் துறையால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

❖ அரிசி விநியோகச் சங்கிலியில் இந்தியாவை ஒரு உலகளாவியத் தலைமையாக நிலை

நிறுத்துவதே இந்த மாநாட்டின் நோக்கமாகும்.

- இது 1.80 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான புதிய அரிசி சந்தைகளுக்கான வாய்ப்புகளைத் திறக்கும் என்பதோடு, மேலும் இதில் 25,000 கோடி ரூபாய் மதிப்புள்ள ஏற்றுமதிப் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திடப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- இந்தியா ஆண்டுதோறும் சுமார் 150 மில்லியன் டன் அரிசியை உற்பத்தி செய்கிறது என்பதோடு இது உலக உற்பத்தியில் கிட்டத்தட்ட 28 சதவீதமாகும்.
- 2024–25 ஆம் ஆண்டில் இந்தியா, சுமார் 12.95 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பிலான 20.1 மில்லியன் மெட்ரிக் டன் அரிசியை ஏற்றுமதி செய்தது.
- வேளாண் தொழில்நுட்ப காட்சிப் பகுதியில் ஒரு புதிய செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான அரிசி வகைப்பிரிக்கும் தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்படும்.
- சுமார் 330 பில்லியன் அமெரிக்க டாலர்களாக மதிப்பிடப்பட்டுள்ள உலகளாவிய அரிசித் துறையின் மதிப்பு, சுமார் நான்கு பில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு ஆதரவளிக்கிறது.


## ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்களில் இந்தியாவின் முன்னேற்றம்




- இந்திய அரசானது, 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் 1 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் புத்தாக்க (RDI) திட்டத்தை அறிமுகப் படுத்தியது.
- 2010–11 ஆம் ஆண்டில் 60,196 கோடி ரூபாயாக இருந்த இந்தியாவின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுச் செலவினம் ஆனது 2020–21 ஆம் ஆண்டில் 1.27 லட்சம் கோடி ரூபாயாக உயர்ந்தது.
- ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுச் செலவினங்களில் மத்திய அரசு சுமார் 43.7 சதவீதப் பங்களிப்பை வழங்குகிற அதே நேரத்தில் தனியார் துறை 36 சதவீதப் பங்களிப்பை வழங்குகிறது.
- 2020–21 ஆம் ஆண்டில் 24,326 ஆக இருந்த காப்புரிமைத் தாக்கல்கள் 2024–25 ஆம்

ஆண்டில் சுமார் 68,176 ஆக அதிகரித்துள்ளன என்பதோடு இது உள்நாட்டுக் கண்டுபிடிப்புகளில் ஏற்பட்ட அதிகரிப்பைப் பிரதிபலிக்கிறது.


## 25,000 புதிய அடல் மேம்படுத்தும் ஆய்வகங்கள்




- ஒரு கோடிக்கும் மேற்பட்ட குழந்தைகளை நடைமுறைச் சோதனைகளில் ஈடுபடுத்தும் சுமார் 10,000 அடல் மேம்படுத்தும் ஆய்வகங்கள் தற்போது இந்தியா முழுவதும் செயலில் உள்ளன.
- அவற்றின் வெற்றியால் ஊக்கம் பெற்ற அரசு, நாடு முழுவதும் 25,000 புதிய அடல் மேம்படுத்தும் ஆய்வகங்களை நிறுவ உள்ளது.
- இந்த ஆய்வகங்கள் அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) ஆகிய துறைகளின் கல்வியை மேம்படுத்துவதையும் மாணாக்கர்களிடையே ஆர்வத்தையும் படைப்பாற்றலையும் வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.
- இந்த STEM சூழல் அமைப்பைப் பூர்த்தி செய்ய ஏழு இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகங்கள் மற்றும் பதினாறு இந்தியத் தகவல் தொழில்நுட்பக் கல்விக் கழகங்கள் உட்பட நூற்றுக்கணக்கான புதிய பல்கலைக்கழகங்கள் நிறுவப்பட்டுள்ளன.

# பொருளாதாரச் செய்திகள்

## குடும்பக் கடன்கள் அதிகரிப்பு




- இந்தியக் குடும்பங்கள் நிதிச் சொத்துக்களை உருவாக்குவதை விட வேகமாக நிதிக் கடனை குவித்து வருகின்றன.

- இந்திய ரிசர்வ் வங்கியின் தரவுகளின்படி, 2019 மற்றும் 2025 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் வருடாந்திர நிதிச் சொத்துக்கள் 48% வளர்ந்தன.
- அதே காலகட்டத்தில், வருடாந்திர நிதிப் பொறுப்புகள் 102% அதிகரித்தன.
- குடும்பங்கள் 2019–20 ஆம் ஆண்டில் நிதிச் சொத்துக்களில் 24.1 லட்சம் கோடி ரூபாயைச் சேர்த்தன என்ற நிலையில் இது 2024–25 ஆம் ஆண்டில் 35.6 லட்சம் கோடி ரூபாயாக உயர்ந்தது.
- 2019–20 ஆம் ஆண்டில் 7.5 லட்சம் கோடி ரூபாயாக இருந்த நிதிப் பொறுப்புகள் 2024–25 ஆம் ஆண்டில் 15.7 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்தன.
- 2019–20 ஆம் ஆண்டில் 12% ஆக இருந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) நிதிச் சொத்துக்களின் பங்கு 2024–25 ஆம் ஆண்டில் 10.8% ஆகக் குறைந்துள்ளது.
- அதே காலக் கட்டத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நிதிப் பொறுப்புகளின் பங்கு 3.9 சதவீதத்திலிருந்து 4.7% ஆக அதிகரித்துள்ளன.
- 2019–20 ஆம் ஆண்டில் 32% ஆக இருந்து, 2024–25 ஆம் ஆண்டில் மொத்தச் சொத்துக்களில் 33.3% ஆக இருந்த வங்கி வைப்புத் தொகையானது முக்கியச் சேமிப்பு வழித் தடமாக இருந்தது.
- 2019–20 ஆம் ஆண்டில் 7.7 லட்சம் கோடி ரூபாயாக இருந்த வணிக வங்கிகளில் வைப்புத் தொகையானது 2024–25 ஆம் ஆண்டில் 54% வளர்ச்சியுடன் 11.8 லட்சம் கோடி ரூபாயாக உயர்ந்தது.
- 2019–20 ஆம் ஆண்டில் 61,686 கோடி ரூபாயாக இருந்த பரஸ்பர நிதிகளில் முதலீடுகள் 655% அதிகரித்து, 2024–25 ஆம் ஆண்டில் 4.7 லட்சம் கோடி ரூபாயாக உயர்ந்தது.
- மொத்தக் குடும்பச் சொத்துக்களில் பரஸ்பர நிதிகளின் பங்கு இந்த காலக் கட்டத்தில் 2.6 சதவீதத்திலிருந்து 13.1% ஆக அதிகரித்துள்ளது.
- 2019–20 ஆம் ஆண்டில் 11.7% ஆக இருந்த நாணய வைத்திருப்புகளின் பங்கு 2024–25 ஆம் ஆண்டில் 5.9% ஆகக் குறைந்துள்ளது.

## இந்திய வீட்டு மனை விற்பனை திரையில் AIF மூலதனம் 2025





- மாற்று முதலீட்டு நிதிகள் (AIF) இந்தியாவின் வீட்டு மனை விற்பனைத் துறைக்கான முதன்மை மூலதன ஆதாரமாக மாறியுள்ளன.

- மனை விற்பனைத் துறையானது தற்போது இந்தியாவில் AIF மூலதனத்தைப் பெறும் மிகப்பெரிய ஒற்றைத் துறையாக உள்ளது.
- AIF நிதிகள் மொத்த இரண்டாம் வகை நிதி உறுதிப் பாடுகளில் கிட்டத்தட்ட சுமார் 80 சதவீதத்தைப் பங்களிக்கின்றன என்ற நிலையில் இது வழக்கமான வங்கி மற்றும் தனியார் பங்கு நிதியை விஞ்சுகிறது.
- 2025 ஆம் ஆண்டு ஜூன் மாத நிலவரப் படி, மொத்த AIF உறுதிப்பாடுகள் ஆனது 14.2 லட்சம் கோடி ரூபாயாக இருந்தன என்ற நிலையில் மேலும் திரட்டப்பட்ட நிதி 6 லட்சம் கோடி ரூபாயை எட்டியது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இந்தியாவில் முதல் CAR T-செல் சிகிச்சை

- உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இந்தியாவின் முதல் NexCAR19 எனப்படும் வெவ்வேறு மரபுத்திரி எண்ணிக்கைக் கொண்ட நோய் எதிரணு உற்பத்தி ஊக்கி ஏற்பி (Chimeric Antigen Receptor-CAR) T-செல் சிகிச்சையானது சமீபத்தில் அறிமுகப் படுத்தப் பட்டது.
- இந்த சிகிச்சை இரத்தப் புற்றுநோய் (லுகேமியா) மற்றும் நிணநீர்க் குழியப் புற்றுநோய் (லிம்போமா) உள்ளிட்ட B-செல் இரத்தப் புற்றுநோய்களை குறிவைக்கிறது.
- NexCAR19 ஆனது, டாடா நினைவு மருத்துவமனையுடன் இணைந்து, பாம்பே இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் கீழான தொழிற்காப்பில் உள்ள ImmunoACT எனும் புத்தொழில் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டது.
- CAR T-செல் சிகிச்சையானது, புற்றுநோய் செல்களைத் தாக்குவதற்காக என்று மரபணு மாற்றப் பட்டு, பின்னர் உடலில் மீண்டும் உட்சேர்க்கப்படுகிறது.





# சுற்றுச்சூழல் செய்திகள்

## இந்திய அளவிலான முதல் கழுகு கணக்கெடுப்பு


- இந்திய வனவிலங்கு நிறுவனம் (WII) ஆனது அருகி வரும் கழுகு இனங்களின் முதல் நாடு தழுவிய மதிப்பீடு மற்றும் கண்காணிப்பு அறிக்கையை வெளியிட்டது.
- 17 மாநிலங்களில் சுமார் 216 தளங்களில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வு, சுமார் 70%

தளங்களில் கூடு கட்டும் நிகழ்வு பதிவாகவில்லை என்பதைக் கண்டறிந்தது.

- அனைத்து ஆவணப்படுத்தப்பட்டக் கூடுகளிலும் 54% ஆனது பாதுகாக்கப்பட்டப் பகுதிகளில் உள்ளன என்ற நிலையில் அவை அவற்றின் முக்கிய வளங்காப்புப் பங்கைக் காட்டுகின்றன.
- வெண்ம முதுகுக் கழுகு, இந்தியக் கழுகு, மெலிந்த அலகு கொண்ட கழுகு மற்றும் செந்தலைக் கழுகுகள் என நான்கு மிக அருகி வரும் இனங்கள் மதிப்பிடப்பட்டன.
- மத்தியப் பிரதேசம் மற்றும் இராஜஸ்தான் ஆகியவை இந்தியாவின் அறியப் பட்ட கழுகுக் கூடுகளில் சுமார் 63% பங்கினைக் கொண்டுள்ளன.
- இந்த மதிப்பீடு வாழ்விட இழப்பு, உணவுப் பற்றாக்குறை மற்றும் டைக்ளோஃபெனாக் நஞ்சேற்றம் ஆகியவற்றை முக்கிய அச்சுறுத்தல்களாக எடுத்துக்காட்டியது.
- வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டத்தின் (1972) முதலாம் அட்டவணையின் கீழ் கழுகுகள் பாதுகாக்கப்படுகின்றன என்பதோடு மேலும் அவை கழுகு வளங்காப்பிற்கான செயல் திட்டத்தின் (2020–25) கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.




## கடல் மாசுபாட்டைக் கண்டறிய உதவும் கருநீலச் சிப்பிகள்





- கிரேக்க அறிவியலாளர்கள் மத்தியத் தரைக் கடலில் அதிகரித்து வரும் நுண்

நெகிழிகளின் மாசுபாட்டைக் கண்டறிய கருநீலச் சிப்பிகளைப் பயன்படுத்துகின்றனர்.

- ஹெலனிக் கடல் சார் ஆராய்ச்சி மையத்தினால் ஆயிரக்கணக்கான கருநீலச் சிப்பிகள் கடலில் சேர்க்கப்பட்டு, பின்னர் அவை மாசுபாட்டிற்காகப் பகுப்பாய்வு செய்யப் பட்டன.
- இங்கு கண்டறியப்பட்ட பெரும்பாலான நுண் நெகிழித் துகள்கள் குடுவைகள் மற்றும் பைகள் போன்ற ஒற்றைப் பயன்பாட்டு நெகிழிகளிலிருந்து வந்தன.
- ஆய்வு செய்யப்பட்ட ஒவ்வொரு கடல் உயிரினங்களிலும் நுண் நெகிழிகள் கண்டறியப் பட்டன என்பதோடு இது பரவலான மாசுபாட்டைக் காட்டுகிறது.

### அழிந்து வரும் கழுகுகளுக்கான காப்பிடம்

- முதுமலை புலிகள் வளங்காப்பகத்தில் (MTR) மோயார் ஆற்றங்கரையில் 10,000க்கும் மேற்பட்ட டெர்மினாலியா அர்ஜுனா ('நீர் மருது') மரங்களை ஆராய்ச்சியாளர்கள் பதிவு செய்தனர்.
- மேம்பட்ட வனவிலங்கு வளங்காப்பு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு வனத்துறை நடத்திய ஆய்வில், சுமார் 93% மரங்கள் உயிர்ப்புடன் இருப்பதாகவும், செழிப்பாக இருப்பதாகவும் கண்டறியப்பட்டது.
- இந்த மரங்களில் மிக அருகி வரும் வெண் முதுகுக் கழுகுகளின் (ஜிப்ஸ் பெங்கலென்சிஸ்) மொத்தம் 56 கூடுகள் அடையாளம் காணப் பட்டன.
- இந்த மரங்கள் மலபார் இராட்சத அணில்கள், புலிகள், சிறுத்தைகள் மற்றும் பிற உயிரினங்களையும் ஆதரிக்கின்றன என்பதோடு இது அதன் அதிகச் சுற்றுச்சூழல் மதிப்பைக் காட்டுகின்றன.
- பூர்வீகத் தாவரங்களை மீட்டெடுக்க உதவும் வகையில், 2026 ஆம் ஆண்டிற்குள் சென்னா ஸ்பெக்டபிலிஸ் மற்றும் ப்ரோசோபிஸ் ஜூலிஃப்ளோரா போன்ற அயல் இனங்களை அழிக்க வன அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

### உணவு மற்றும் வேளாண்மை நிலை குறித்த அறிக்கை 2025

- உணவு மற்றும் வேளாண்மை நிலை (SOFA) குறித்த அறிக்கை 2025 ஆனது ஐக்கிய

நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பினால் (FAO) வெளியிடப் பட்டது.

- நிலத் தரமிழப்பு ஆனது, உலகளவில் 1.7 பில்லியன் மக்களைப் பாதிப்பதோடு, உணவுப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளை அச்சுறுத்துகிறது என்று இந்த அறிக்கை கூறியது.
- உலகளாவியக் காடழிப்புக்கு, சுமார் 90% காடுகளின் இழப்புக்குப் பங்களித்த வேளாண்மையின் விரிவாக்கம் முக்கிய காரணமாக உள்ளது.
- நிலத் தரமிழப்பு காரணமாக ஒவ்வோர் ஆண்டும் 3.6 மில்லியன் ஹெக்டேர் (mha) பயிர் நிலங்கள் கைவிடப் படுவதாக அறிக்கை குறிப்பிட்டது.
- கிழக்கு மற்றும் தெற்காசியாவில், கடுமையான நிலத் தரமிழப்பு மற்றும் அடர்த்தியான மக்கள்தொகை நெருக்கடியை எதிர்கொள்ளும் மிகப்பெரிய மக்கள் தொகை உள்ளது.
- மனிதனால் தூண்டப்பட்ட நிலத் தரமிழப்புடன் தொடர்புடைய மிக உயர்ந்தப் பயிர் மகசூல் இடைவெளிகளில் சில இந்தியாவில் பதிவாகியுள்ளது.


GLOBAL DISTRIBUTION OF FARMS, AREA OPERATED AND DIETARY ENERGY PRODUCTION

| Farm size category (ha) | Total farms (millions) | Total area operated (million ha) | Share of farms (%) | Share of area operated (%) | Share of dietary energy (kcal) produced (%) |
|---|---|---|---|---|---|
| <1 | 422.5 | 156.7 | 72.6 | 5.5 | 9.9 |
| 1–2 | 73.5 | 101.9 | 12.6 | 3.6 | 6.3 |
| 2–5 | 58.3 | 169.4 | 10.0 | 5.9 | 9.3 |
| 5–10 | 14.8 | 99.1 | 2.5 | 3.5 | 4.9 |
| 10–20 | 5.7 | 75.6 | 1.0 | 2.6 | 4.5 |
| 20–50 | 3.6 | 107.8 | 0.6 | 3.8 | 7.6 |
| 50–100 | 1.6 | 105.5 | 0.3 | 3.7 | 7.3 |
| 100–200 | 1.0 | 132.9 | 0.2 | 4.6 | 9.5 |
| 200–500 | 0.7 | 200.2 | 0.1 | 7.0 | 11.5 |
| 500–1 000 | 0.3 | 182.5 | 0.0 | 6.4 | 11.6 |
| >1 000 | 0.3 | 1 529.8 | 0.1 | 53.5 | 17.6 |
| **Total** | **582.1** | **2 861.5** | **100.0** | **100.0** | **100.0** |

## சர்வதேசப் புலம்பெயர்வு கண்ணோட்ட அறிக்கை 2025

- 2025 ஆம் ஆண்டு சர்வதேசப் புலம்பெயர்வு கண்ணோட்ட அறிக்கையானது பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பினால் (OECD) வெளியிடப் பட்டது.
- OECD நாடுகளுக்கான நிரந்தரப் புலம்பெயர்வு 2024 ஆம் ஆண்டில் 4% குறைந்து 6.2 மில்லியனாக இருந்தது ஆனால் இது 2019 ஆம் ஆண்டில் இருந்த அளவை விட 15% அதிகமாக இருந்தது.
- குடும்ப மறு ஒருங்கிணைப்பு ஆனது புலம்பெயர்வுக்கு முக்கியமான ஒரு காரணமாக இருந்த அதே நேரத்தில் தொழிலாளர் புலம்பெயர்வு 21% குறைந்துள்ளது மற்றும் மனிதாபிமான நடவடிக்கை சார்ந்த புலம்பெயர்வு 23% அதிகரித்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் புகலிட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 3 மில்லியனை எட்டியது என்ற நிலையில் அவற்றில் பாதிக்கும் மேற்பட்டவை அமெரிக்காவில் தாக்கல் செய்யப் பட்டன.
- இந்தியா, சீனா, பிலிப்பைன்ஸ் மற்றும் ஜெர்மனி ஆகியவை இதில் அதிகமான அளவு பங்களிப்பாளர்களாக உள்ள நிலையில், ஆசியாவானது புலம்பெயர்ந்த சுகாதார நிபுணர்களின் முன்னணி ஆதாரமாகத் தொடர்ந்து திகழ்கிறது.

- 2023 ஆம் ஆண்டில், சுமார் 600,000 இந்தியர்களுடன் OECD நாடுகளுக்கான புதிய குடியேறிகளுக்கான முதன்மையான மூல நாடாக இந்தியா உருவெடுத்தது.
- இது முந்தைய ஆண்டை விட 8% அதிகம் ஆகும்.
- 2024 ஆம் ஆண்டில் OECD நாடுகளில் புகலிடம் தேடுபவர்களுக்கான முதன்மையான மூல நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக இருந்தது.




## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### டாக்டர் பூபன் ஹசாரிகா தேசிய விருதுகள் 2025




- பாரத ரத்னா டாக்டர் பூபன் ஹசாரிகா தேசிய விருதுகள் அசாமின் கௌஹாத்தியில்

வழங்கப் பட்டன.

- இலக்கியம், இசை, திரைப்படம் மற்றும் பாரம்பரியத்திற்கானப் பங்களிப்புகளுக்காக வடகிழக்கைச் சேர்ந்த யேஷே டோர்ஜி தோங்சி, லைஷ்ராம் மேமா, ரஜினி பாசுமதரி, L. R. சைலோ, டாக்டர் சூர்ஜ்யா காந்தா ஹசாரிகா மற்றும் பேராசிரியர் டேவிட் R. சியெம்லி உள்ளிட்ட ஆறு கலாச்சார பிரமுகர்களுக்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டன.
- இந்த நிகழ்வு பூபன் ஹசாரிகாவின் நூற்றாண்டு விழாவைக் குறிக்கும் வகையில், ஒற்றுமை மற்றும் கலாச்சார நல்லிணக்கத்தின் மரபைக் கொண்டாடியது.
- பூபன் ஹசாரிகா (1926–2011) அசாமைச் சேர்ந்த ஓர் இந்தியப் பாடகர், இசை அமைப்பாளர், பாடலாசிரியர் மற்றும் திரைப்படத் தயாரிப்பாளர் ஆவார்.

# முக்கிய தினங்கள்

## தேசிய சட்ட சேவைகள் தினம் 2025 - நவம்பர் 09

- இது 1995 ஆம் ஆண்டு இந்த தேதியில் நடைமுறைக்கு வந்த 1987 ஆம் ஆண்டு சட்ட சேவைகள் அதிகாரிகள் சட்டத்தை நினைவு கூர்கிறது.
- இது அனைவருக்கும், குறிப்பாக ஏழைகள் அல்லது சமூக ரீதியாகப் பிற்படுத்தப் பட்ட நபவர்களுக்கு நீதி கிடைப்பதை ஊக்குவிக்கிறது.
- 2022 மற்றும் 2025 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், 44 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தேசிய சட்ட சேவைகள் ஆணையம் (NALSA) மூலம் இலவச சட்ட உதவியைப் பெற்றனர்.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Justice for All: Through the Lens of Legal Aid" என்பதாகும்.




## உத்தரகாண்ட் மாநில உருவாக்க தினம் 2025 - நவம்பர் 09

- 2025 ஆம் ஆண்டு ஆனது உத்தரகாண்டின் வெள்ளி விழாவைக் குறிக்கிறது.
- இந்த மாநிலம் முதலில் உத்தராஞ்சல் என்று பெயரிடப்பட்டது மற்றும் 2007 ஆம்

ஆண்டில் அதிகாரப்பூர்வமாக உத்தரகாண்ட் என மறுபெயரிடப்பட்டது.

- அதன் குளிர்காலத் தலைநகரம் டேராடூன், மற்றும் கோடைகாலத் தலைநகரம் கெய்ர்சைன் ஆகும்.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Celebrating 25 Years of the Land of the Gods" என்பதாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★